**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE MINISTRY OF ENVIRONMENT, FOREST AND CLIMATE CHANGE FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF THIRU.K.SUDHAKARAN, MINING OF ROUGH STONE AND GRAVEL QUARRY OF 2.57.0 HEC (TOTAL CLUSTER AREA 3.57.0HEC) LOCATED IN S.F.NO.7, 8/1, 8/2, 8/3, 8/4, 8/5 and 214/5, VADA ALAPIRANDAN VILLAGE, CHEYYAR TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 18.08.2023 AT 11.00 AM IN M/S. SRI LAKSHMI MAHAL, MAIN ROAD, OPP TO TAHSILDAR OFFICE, CHEYYAR VILLAGE AND TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Dr. M. Priyadharshini | District Revenue Officer,<br>Tiruvannamalai District,<br>Tiruvannamalai. |
| 2. | Dr.P. Kamaraj | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 3. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 4. | Selvi. R. Anamika | Sub Collector,<br>Cheyyar. |
| 5. | Thiru. M. Mahaboob Khan | Assistant Geologist,<br>AD Mines Office,<br>Tiruvannamalai. |
| 6. | Publics and Environmentalists | 30 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai welcomed the respected District Revenue officer, Tiruvannamalai, General Public, Environmentalists and other Government Officials for the Public Hearing meeting for the proposed rough stone quarry.

The District Environmental Engineer stated that for obtaining the environmental clearance from the State Environment Impact Assessment Authority, the public hearing meeting is being conducted today for the proposed Rough stone and Gravel Quarry ofThiru. K.Sudhakaran, Mining of

Rough Stone and Gravel Quarry in 2.57.0hectat Vada Alapirandan Village, Cheyyar Taluk, Tiruvannamalai District.

As per the Environment (Protection) Act and the Environmental Impact Assessment Notification 2006, it is mandatory to conduct public hearing where the opinions of the public will be obtained through oral/or in written statement, the minutes will be recorded and will be submitted to the State Environment Impact Assessment Authority for the mining projects (Individual or Cluster extent) above 5 hect of area. The public notice for this public hearing was published in The Hindu (English) &Daily Thanthi (Tamil)on 15.07.2023 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed rough stone quarry ofThiru. K.Sudhakaran, Mining of Rough Stone and Gravel Quarry.

Further, the District Environmental Engineer has informed that proposed quarry project and Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation by the project proponent. After that, public can express their views, suggestions and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public's & Environmentalist will be recorded and submitted to the Environment Impact Assessment Authority.

The District Revenue Officer requested the project proponent to explain the EIA study conducted by them to the public in detail.

On behalf of the project proponent Thiru. B.Swamynathan, the Consultant, M/s. Creative Engineers Consultants, Chennai welcomed the District Revenue Officer, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

Then the Assistant Engineer, TNPCB has requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one after giving their name and address.

The following are the views represented by the public.

1. **Thiru.A. Kopalakrishnan, Vada Mavandhal Village.**

He said,"On behalf of the farmers, I would like to express my first-hand greetings to all the agricultural dignitaries and government officials who were present. I belong to Vada Mavandhal village. I have absolutely no interest in this quarry. There are lakes and colleges around this quarry. I don't know how they got permission for this quarry. No one asked the students or farmers of our Village. Today more than hundred crushers have arrived in this Vembakkam area. Due to this,agricultural lands and residential areas are affected. This is not fair. Here they refuse to accept people's views. The livelihood of the people is affected due to the operation of this quarry. If quarries are started in every town like this, agriculture will be affected here. So I record that I have absolutely no interest in locating this quarry here. Thank you all."

2. **Thiru. Silambarasan, Vada Alapirandan Village.**

He said,"I am a farmer from Vada Alapirandan village. I have no objection to the operation of Sudhakaran quarry. I am of the opinion that there will be no harm to the natural environment of the agricultural lands surrounding the quarry. So I heartily express our desire to set up a quarry at that place. Thank you all."

3. **Thiru. Gowrishankar,Vada Alapirandan Village.**

He said,"The upcoming quarry will be located 500 meters away from our houses. Also, the blasting noise from these quarries can cause vibrations in our homes. There are also large numbers of peacocks in that area, which may be affected."

The district environmental engineer who responded to this explained that according to the central government regulations, they have given permission to set up quarries in places located at a distance of 500 meters away and there is a rule for quarries to follow a noise-free method during blasting. To which the man replied and ended his speech by saying that "we are not interested in this quarry as there are residential and agricultural lands here."

**The following 27 members of the public have expressed their opinion in writing that they have no objection to the operation of this quarry. They have also requested to provide them with employment opportunities in the proposed quarry.**

**Table – 1**

| Sl.No. | Name Tvl. | Village |
|---|---|---|
| 1. | Haridass | Athi |
| 2. | Kuppan | Vada Alapirandan |
| 3. | Dhanasekar | Vada Alapirandan |
| 4. | L.Elango | Athi |
| 5. | Silambarasan | Vada Alapirandan |
| 6. | G. Gopalakrishnan | Vada Alapirandan |
| 7. | K. Ramakrishna | Telangana |
| 8. | S.K. Chary | Telangana |
| 9. | K. Sridevi | Telangana |
| 10. | B. Durga prasad | Telangana |
| 11. | A.Gopalreddy | Telangana |
| 12. | T.Anil reddy | Telangana |
| 13. | S. Ankaiah | Andhra Pradesh |
| 14. | K. Govardhan | Telangana |
| 15. | Paloju sydaiah | Telangana |
| 16. | A.P. Rajendiran | Andhra Pradesh |
| 17. | B.Munikrishana | Andhra Pradesh |
| 18. | A.Ramakrishna | Telangana |
| 19. | S.K. Karimulla | Andhra Pradesh |
| 20. | S.K.Rahman | Andhra Pradesh |
| 21. | R.Arul | Andhra Pradesh |
| 22. | R.Kumaresan | Vada Alapirandan |
| 23. | T.S.Gothadam | Vada Alapirandan |
| 24. | K.Meera | Vada Alapirandan |
| 25. | D.Ashok kumar | Vada Alapirandan |
| 26. | D.Radhakrishnan | Vada Alapirandan |
| 27. | B.Punniakotti | Vada Alapirandan |

**In a petition, the following 16 members of the Vada Alapirandan Pudur village public have expressed their opposition for the operation of this quarry.**

**Table - 2**

| Sl.No. | Name<br>Tvl. | Village |
|---|---|---|
| 1. | K. Hari | Vada Alapirandan Pudur |
| 2. | S. Mani | Vada Alapirandan Pudur |
| 3. | P. Balu | Vada Alapirandan Pudur |
| 4. | B.Punniakotti | Vada Alapirandan Pudur |
| 5. | N. Selvakumar | Vada Alapirandan Pudur |
| 6. | Kesavan | Vada Alapirandan Pudur |
| 7. | M. Karnan | Vada Alapirandan Pudur |
| 8. | T. Natarajan | Vada Alapirandan Pudur |
| 9. | Subramani | Vada Alapirandan Pudur |
| 10. | B. Palani | Vada Alapirandan Pudur |
| 11. | N. Jeyagopi | Vada Alapirandan Pudur |
| 12. | R. Murugaiyan | Vada Alapirandan Pudur |
| 13. | Elumalai | Vada Alapirandan Pudur |
| 14. | N. Palani | Vada Alapirandan Pudur |
| 15. | P. Manikandan | Vada Alapirandan Pudur |
| 16. | A. Gopal | Vada Alapirandan Pudur |

Thiru. Suresh, Karanthai Village, Vembakkam Taluk, Tiruvannamalai District has tagged in TNPCB website, stating that the village public has not participated in the Public Hearing meeting and requested to conduct the meeting again in the village itself. But it is submitted that thirteen public from the village has participated in the meeting and signed in the attendance register and Twenty six persons have given their opinion in writing as above. (Table - 1 SI.No. 2,3,5,6,22 to 24 & Table – 2 SI.No.1 to 16 )

**Thereafter no views/comments were raised.**

This public hearing process came to an end with the vote of thanks by Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 15.07.2023 for notifying the public hearing meeting.
2. The certificate issued by the Village Administrative Office for the Tom Tom and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 4 & 30 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing \ Summary in English &Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received through Public Hearing Meeting & Social media - 29 numbers.

| | | |
|---|---|---|
| DEE/TNPCB,<br>Tiruvannamalai. | Sub Collector,<br>Cheyyar. (1/6) | District Revenue Officer,<br>Tiruvannamalai.<br>(1/6) |

**திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், வடஆள பிறந்தான் கிராமம், புலஎண். 7, 8/1, 8/2, 8/3, 8/4, 8/5 மற்றும் 214/5 ,2.57.0 ஹெக்டேர் (மொத்த கூட்டு பரப்பளவு 3.57.0 ஹெக்டேர்) பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு/. K. சுதாகரன் கல் மற்றும் கிராவல் குவாரி நடத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 18.08.2023 அன்று திரு/ள். ஸ்ரீ லட்சுமி மஹால், மெயின்ரோடு, தாலுக்கா அலுவலகம் எதிரில், செய்யார் கிராமம் & வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் காலை11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவர். மு. பிரியதர்ஷினி | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருவண்ணாமலை. |
| 2. | முனைவர்.பா. காமராஜ் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | செல்வி. R. அனாமிகா | சார் ஆட்சியர்,<br>செய்யார் |
| 5. | திரு. மு. மஹபுப்கான் | உதவி புவியியலாளர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>திருவண்ணாமலை. |
| 6. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (30 பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதி பெறும்பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், வட ஆளபிறந்தான் கிராமத்தில் மொத்தம் 2.57.0 ஹெக்டர் பரப்பளவில் திரு/ள். K.சுதாகரன் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனமானது கல் குவாரி வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல்உள்ள கல் குவாரி சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி தி/ள். K. சுதாகரன் கல் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். ஸ்ரீ லட்சுமி மஹாலில் 18.08.2023 அன்று காலை11.00 மணியளவில் நடைபெறுமென தி இந்து மற்றும் தினத்தந்தி செய்தித் தாள்களில் 15.07.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் தொழிற்சாலை நிர்வாதத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையை பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திரு. B. சுவாமிநாதன், ஆலோசகர் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும், தி/ள். கிரியேட்டிவ் இஞ்சினியர்ஸ் & கன்சல்டன்ஸ், சென்னை நிறுவனத்தின் சார்பாக பணிவுடன் வரவேற்று நிழற்பட விளக்ககாட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, தற்போது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. **<u>திரு. அ. கோபாலகிருஷ்ணன், வட மாவாந்தல் கிராமம்.</u>**

இவர்கூறுகையில்,

வருகை புரிந்து இருந்த அனைத்து விவசாய பெருமக்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் விவசாயிகள் சார்பாக என் முதற்கண் வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன். நான் வட மாவாந்தல் கிராமத்தில் கமிட்டி பஞ்சாயத்தை சேர்ந்தவன்.இந்த குவாரி அமையயிருப்பதில் எங்களுக்கு துளியும் விருப்பமில்லை. இந்த குவாரியை சுற்றி ஏரிகளும் கல்லூரிகளும் உள்ளன. இந்த குவாரிக்கு எவ்வாறு அனுமதி தந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எங்கள் ஊரின் பட்டாதாரிகளையோ விவசாயிகளையோ யாரையும் கேட்கவில்லை. இன்றளவில் இந்த வெம்பாக்கம் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட கிரஷர்கள் வந்துள்ளன. இதனால் விவசாய நிலங்களும் குடியிருப்பு பகுதிகளும் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றன. இது நியாயமே கிடையாது. இங்கு மக்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். இந்த குவாரி அமைவதால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இப்படியே ஒவ்வொரு ஊர்களிலும் கிரஷர்கள் ஆரம்பித்து வந்தால் இங்கு விவசாயம் பாதிக்கப்படும். எனவே இந்த குவாரி இங்கு அமையவிருப்பதில் எங்களுக்கு துளியும் விருப்பமில்லை என்பதை இங்கு பதிவு செய்து கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. என்று கூறினார்.

2. **<u>திரு. சிலம்பரசன், வட ஆளபிறந்தான் கிராமம்.</u>**

இவர்கூறுகையில்,

நான் வட ஆளபிறந்தான் கிராமத்தை சேர்ந்த ஒரு விவசாயி. சுதாகரன் கல்குவாரி அமைவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சபனையும் இல்லை. அந்த குவாரியை சுற்றியுள்ள விளைநிலங்களால் இயற்கை சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று கருதுகிறேன். எனவே அந்த இடத்தில் கல்குவாரி அமைப்பதற்கு நாங்கள் மனப்பூர்வமாக விருப்பம் தெரிவிக்கிறோம். நன்றி.

3. **<u>திரு. கௌரிசங்கர், வட ஆளபிறந்தான் கிராமம்.</u>**

இவர்கூறுகையில்,

அமையவிருக்கும் குவாரியானது நாங்கள் வசிக்கும் வீடுகளில் இருந்து 500 மீட்டருக்கு தொலைவில் அமையவுள்ளது. மேலும், இந்த குவாரிகளுக்கு வைக்கும் வெடி சத்தமானது எங்கள் வீடுகளில் அதிர்வலையை ஏற்படுத்தும். மேலும் அப்பகுதியில் அதிகமான அளவில் மயில்கள் உள்ளன, அவைகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும். இதற்கு பதில் அளித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் மத்திய அரசின் விதிப்படி 500 மீட்டருக்கு தொலைவில் அமைந்துள்ள இடங்களில் குவாரியை அமைக்கலாம் என்று அனுமதி அளித்துள்ளது மேலும்

வெடி வைக்கும் போது சத்தம் வராத முறையை பின்பற்ற வேண்டும் என்று குவாரிகளுக்கு விதிமுறை உள்ளது என்று விளக்கினார். அதற்கு பதில் அளித்த அந்த நபர் இங்கு குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்கள் அமைந்துள்ளதால் எங்களுக்கு இந்த குவாரி வருவதில் விருப்பமில்லை என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்

**பொதுமக்கள் 27 நபர்கள் எழுத்துமூலமாக தங்ளுக்கு இந்தகுவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் அமையயிருக்கும் குவாரியில் தங்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரும்படியும் கேட்டுக்கொண்டுள்ளனர்**

**<u>அட்டவணை 1</u>**

| வ.எண் | பெயர் திருவாளர்கள் | கிராமம் |
|---|---|---|
| 1. | ஹரிதாஸ் | அத்தி |
| 2. | குப்பன் | வடஆளபிறந்தான் |
| 3. | தனசேகர் | வடஆளபிறந்தான் |
| 4. | எல்.இளங்கோ | அத்தி |
| 5. | சிலம்பரசன் | வடஆளபிறந்தான் |
| 6. | கே.ராமகிருஷ்ணா | தெலுங்கான |
| 7. | அ. கோபால கிருஷ்ணன் | வடஆளபிறந்தான் |
| 8. | எஸ்.கே. சாரி | தெலுங்கான |
| 9. | கே.ஸ்ரீதேவி | தெலுங்கான |
| 10. | பி. துர்காபிரசாத் | தெலுங்கான |
| 11. | ஏ.கோபால்ரெட்டி | தெலுங்கான |
| 12. | டி.அனில்ரெட்டி | தெலுங்கான |
| 13. | எஸ்.அங்கய்யா | ஆந்திரபிரதேசம் |
| 14. | கே.கோவர்தன் | தெலுங்கான |
| 15. | பலோஜுசித்தையா | தெலுங்கான |
| 16. | ஏ.பி.ராஜேந்திரன் | ஆந்திரபிரதேசம் |
| 17. | பி.முனிகிருஷ்ணா | ஆந்திரபிரதேசம் |
| 18. | ஏ.ராமகிருஷ்ணா | தெலுங்கான |
| 19. | எஸ்.கே. கரிமுல்லா | ஆந்திரபிரதேசம் |
| 20. | எஸ்.கே.ரஹ்மான் | ஆந்திரபிரதேசம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆர்.அருள் | ஆந்திரபிரதேசம் |
| 22. | ஆர்.குமரேசன் | வடஆளபிறந்தான் |
| 23. | டி.எஸ்.கோதண்டம் | வடஆளபிறந்தான் |
| 24. | கே.மீரா | வடஆளபிறந்தான் |
| 25. | டி.அசோக்குமார் | வடஆளபிறந்தான் |
| 26. | டி.ராதாகிருஷ்ணன் | வடஆளபிறந்தான் |
| 27. | பி.புண்ணியகோட்டி | வடஆளபிறந்தான் |

**கிராம பொதுமக்கள் 16 நபர்கள் கையொப்பம் இட்ட ஒரு மனு வாயிலாக தங்களுக்கு இந்தகுவாரி அமைவதற்கு எதிப்பு தெரிவித்து கருத்து தெரிவித்துள்ளனர்.**

<u>அட்டவணை 2</u>

| வ.எண் | பெயர் திருவாளர்கள் | கிராமம் |
|---|---|---|
| 1. | K. ஹரி | வட ஆளபிறந்தான் புதூர் |
| 2. | S. மணி | வட ஆளபிறந்தான் புதூர் |
| 3. | P. பாலு | வட ஆளபிறந்தான் புதூர் |
| 4. | B. புண்ணியகோட்டி | வட ஆளபிறந்தான் புதூர் |
| 5. | N. செல்வகுமார் | வட ஆளபிறந்தான் புதூர் |
| 6. | கேசவன் | வட ஆளபிறந்தான் புதூர் |
| 7. | M. கர்ணன் | வட ஆளபிறந்தான் புதூர் |
| 8. | T. நடராஜன் | வட ஆளபிறந்தான் புதூர் |
| 9. | சுப்பிரமணி | வட ஆளபிறந்தான் புதூர் |
| 10. | B. பழனி | வட ஆளபிறந்தான் புதூர் |
| 11. | N. ஜெயகோபி | வட ஆளபிறந்தான் புதூர் |
| 12. | R. முருகேசன் | வட ஆளபிறந்தான் புதூர் |
| 13. | S. ஏழுமலை | வட ஆளபிறந்தான் புதூர் |
| 14. | N. பழனி | வட ஆளபிறந்தான் புதூர் |
| 15. | P. மணிகண்டன் | வட ஆளபிறந்தான் புதூர் |
| 16. | A. கோபால் | வட ஆளபிறந்தான் புதூர் |

திரு. சுரேஷ், கரந்தை கிராமம், வெம்பாக்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில், குவாரி அமையவிருக்கும் கிராம பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்றும் அதனால் மீண்டும் கிராமத்திலேயே கூட்டத்தை நடத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இக்கூட்டத்தில் குவாரி அமையவிருக்கும் காகணம் கிராமத்தைச் சேர்ந்த 13 பொதுமக்கள் கலந்து கொண்டு வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளனர். மேலும் 26 நபர்கள் எழுத்துப்பூர்வமாக தங்கள் கருத்தை பதிவு செய்துள்ளனர் என்று சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது. (அட்டவணை 1–ல் வரிசை எண் – 02, 03, 05, 07, 22 முதல் 27 வரை மற்றும் அட்டவணை 2–ல் வரிசை எண் 1 முதல் 16 வரை)

**பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டம் நிறைவு பெறுகிறது என்று உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை கூறினார்.

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக் கேட்புகூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 15.07.2023)
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டவர்களின் வருகைபதிவேடு (4 பக்கங்கள் 30 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 26 மனுக்கள்.

| | | |
|---|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை | சார் ஆட்சியர்,<br>செய்யார் (4/6) | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருவண்ணாமலை (4/6) |